# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 10 வியாழக்கிழமை 27.09.2024 கதிர் 372







# தனிப்பட்ட நபர்களின் தேவைக்கு ஏற்பவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது

## உறுதிப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் இருப்பதாகக் கூறுகின்றார் ஷானி அபேசேகர

**"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏப்ரல் 21 ஆம் திகதி தனித்து நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. இதில் சதித்திட்டத்துடன் கூடிய முன்னரான சம்பவங்களுடன் தொடர்புடைய திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்பதை உறுதியாக கூற முடியும்" என்று தெரிவித்துள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, "தனிப்பட்ட நபர்களின் தேவைக்கு ஏற்பவே இது நடந்தது என உறுதிப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் ஊடாகவே தெரிய வருகிறது" என்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.**

**"விசாரணை நடத்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து பல விடயங்கள் வெளிப்பட்டுள்ளன.**

6➤



# ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக தலதா அத்துகோரள

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள நிறுத்தப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் பின்னர் அரசியலமைப்புச் சபையில் பிரதமர் பதவிக்கு இவரைப் பரிந்துரைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

தலதா அத்துக்கோரள ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக பொதுத் தேர்தலில் அன்னம் சின்னத்தில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# பொதுத் தேர்தலை எவ்வாறு தமிழ்த் தரப்பு எதிர்கொள்வது?

## யாழ்ப்பாணத்தில் இன்றும் கலந்துரையாடல்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், சில சிவில் சமூக அமைப்புகளுக்கும் இடையில் இன்று சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதிவு செய்யப்படாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதை விட, தமிழ் மக்களின் நலன் கருதி அனைவரும் தம்முடன் இணைந்து பயணிக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்

# ரணிலுக்கு தேசிய மக்கள் சக்தி புகழாரம்

முன்னாள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் செயற படவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சத்துரங்க அபேசிங்க புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக தெரண தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும் போது அவர் கூறியதாவது:

எதிர்காலத்துக்கு தேவையான ஏற்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளது. புதிய நிதியமைச்சர் நியமிக்கப்பட்ட பின்னர், அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

எதிர்காலத்துக்கு தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயுக்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான பணம் அரசாங்கத்திடம் இருக்கின்றது.

அரசாங்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் முன்னாள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற படவில்லை. இதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றார் அவர்.

# 10 நிதிசார் குற்றங்கள் தொடர்பில் விசாரணை

கடந்த காலத்தில் புரியப்பட்ட பாரதூரமான 10 நிதிசார் குற்றச்செயல்கள் பற்றிய விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் நிதிசார் குற்றச்செயல்களை புரிந்தவர்களுக்கு எதிராக சட்டம் முறையாக அமுலாக்கப்படுவதாக மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அதனை தாமதமின்றி நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.





# கிழக்கு மாகாண ஆளுநர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுனர் ஜெயந்த லால் ரத்னசேகர திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கந்தளாய் அக்ரபோதி வித்தியாலய பழைய மாணவனும், ஊவாவெல்லஸ்ஸ பல் கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், தற்போதைய மட்டக்களப்பு,புணானை விஞ்ஞான தொழில்நுட்பபல்கலைக்கழகத்தின் உபவேந்தரும், இரசாயனவியல் பேராசிரியருமாவார்.

தனது ஆரம்பக் கல்வி கந்தளாயில் உள்ள அக்ரபோதி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கொழும்பு நாலந்தா கல்லூரியிலும் (1972-1980) கற்றார். அத்துடன் ரஷ்யாவின் மக்கள் நட்புபல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார்.

1988 இல் வேதியியலில் ஹானர்ஸ் பட்டம் பெற்றார். 1993 இல் அவர் வேதியியலில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றார்.

1996 ஆகஸ்ட் மாதம் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக 2018 இல் வேதியியலில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

மற்றும் 1999 முதல் 2005 வரை பயன்பாட்டு அறிவியல் பீடத்தின் உபவேந்தராகவும்பணியாற்றினார்.

2017 ஜனவரியில் இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2021 இல் துணைவேந்தர்கள் மற்றும் இயக்குநர்கள் குழுவின் தலைவராக பணியாற்றியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், சுற்றுச்சூழல் வேதியியல், கோட்பாட்டு வேதியியல், உயர் கல்வியில் தர உத்தரவாதம் மற்றும் அறிவியல் கல்வி ஆகியவற்றில் அவரது ஆராய்ச்சி ஆர்வங்கள் உள்ளன. ரத்னசேகர பல பயிற்சி நிகழ்ச்சிகள்மற்றும்பட்டறைகளில் ஒரு பயிற்சியாளராகவும் வளவாளராகவும் இருந்துள்ளார்.

அவர் ஒரு சுயாதீன பத்திரிகையாளர், எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் என நன்கு அறியப்பட்டவர். அத்துடன் தமிழ் உட்பட மூன்று மொழிகளிலும் சரளமாகஉரையாடும்பாண்டித்தியம் மிக்கவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# வைத்தியர் அர்ச்சுனாவுக்கு அக். 10 வரை விளக்கமறியல்

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவை எதிர் வரும் ஒக்டோபர் 10ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது

வைத்தியர்களை தொலைபேசியில் அச்சுறுத்தியமை,பேசித் தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் இன்று சாவகச்சேரி நீதி மன்றில் நீதிபதி அ.யூட்சன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்பட்டது.

இதன்போது வைத்தியர் அர்ச்சுனா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்க தவறியமை, பிணை நிபந்தனைகளை மீறி செயற்பட்டமை காரணமாக வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் பிணை ரத்து செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (001)

# ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் கைது



ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சசங்க சம்பத் சஞ்சீவ, சந்தேகத்தின் பேரில் இன்று கைது செய்யப்பட்டு நாவலப்பிட்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்

கடந்த 21 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளரான நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதி ஒருவரை சந்தேக நபர் தாக்கிய சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபரை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை, முறைப்பாட்டாளர் சந்தேக நபரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸில் சந்தேகநபர் செய்த முறைப்பாடு தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹரேந்திர களுகம்பிட்டிய தெரிவித்தார்.

# ஓய்வூதியத்தை இழந்த முன்னாள் எம்.பி.க்கள்

குறித்த காலத்துக்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக 85 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியத்தை இழந்துள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஓய்வூதியத்தை இழந்த 85 எம்.பி.க்களில் எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி எம்.பி.க்களும் அடங்குகின்றனர்.

நாடாளுமன்றத்தில் ஐந்தாண்டுகளை நிறைவு செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மாதாந்த ஓய்வூதியம் 45,000 ஷரூபாவாகும்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பசுமை அமைதி விருதுகளுக்கு மாணவர் விண்ணப்பிக்கலாம்




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கோடு ஆண்டுதோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்குரிய பசுமை அமைதி விருதுகளைத் தெரிவு செய்வதற்கான சூழல் பொதுஅறிவுப் பரீட்சை ஒக்ரோபர் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில்,

சூறையாடப்படும் இயற்கை வளங்கள், கண்மூடித்தனமான நிலப் பயன்பாடு, கட்டுப்பாடற்றுப் பெருகும் மாசுகள், சூடாகிவரும் பூமி, விஸ்வரூபம் பெற்று வரும் காலநிலை மாற்றம் ஆகியனவற்றின் கூட்டுத் தாக்குதல்களினால் இயற்கை மூச்சுத்திணறி வருகிறது. இந்நிலை நீடித்தால் விரைவிலேயே உலகம் பெரும் பிரளயத்துக்குள் தள்ளப்பட்டுவிடும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. எனினும், இந்த எச்சரிக்கைகளைப் புறந்தள்ளி இயற்கைச் சூழலை நாம் தொடர்ந்து மோசமாகச் சீரழித்துக் கொண்டிருக்கிறோம்.

இயற்கையின் மீதான தாக்குதல்களை நிறுத்தி அதனுடன்ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து உலகத்தையும் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, மாணவர்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கோடு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களுக்குப் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகிறது.

மாணவர்களிடையே 2024ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணையவழியூடாக 27.10.2024 (ஞாயிற்றுக்கிழமை) முன்னிரவு 7.00 மணி தொடங்கி 8.30 மணிவரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும். இலவசமாக நடைபெறவுள்ள இப்பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் றறற.வயஅடைெவழையெடபசநநெ. ழசப இணையத்தளத்தின் ஊடாக 20.10.2024 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இப்பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களிலிருந்து முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதழோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் 1 பவுண் தங்கப் பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளிப் பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கலப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




# மோட்டார் சைக்கிள் விபத்து கணவன் மனைவி உயிரிழப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தம்பதியர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வேனுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய கணவனும் அவரது 32 வயது மனைவியும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் வேனின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக மகேசன் நியமனம்!



(வி.ரி.சகாதேவராஜா)

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் மீண்டும் பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய 14 அமைச்சுக்களின் செயலா ளர்களுள் ஒரேயொரு நிருவாக சேவையின் மூத்த தமிழ் உயரதிகாரி திரு மகேசன் ஆவார். முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரான கணபதிப்பிள்ளை மகேசன் மீண்டும் பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும் சர்வதேச வணிகத்தில் எம்பிஏ பட்டத்தையும் (ஆசிய தொழில்நுட்ப நிறுவனம்- தாய்லாந்து), டுடுட (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), சர்வதேச உறவுகளில் PGD (BCIS) பட்டத்தையும் பெற்றவராவார்.

# ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்தியவர்கள் அநுரவிடம் எதிர்பார்ப்பது எதனை?

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. 2022-ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி காரணமாக கொழும்பு நகரின் காலி முகத்திடலில் நீண்ட போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இந்த ஆட்சி மாற்றத்தை எப்படி பார்க்கின்றனர்? புதிய ஜனாதிபயிடமிருந்து அவர்கள் எதிர்பார்ப்பது என்ன?

இலங்கையில் அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்து கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில், இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் மாறி மாறி இரண்டு தரப்பினர் ஆட்சிப் பீடத்தில் ஏறுவதை மாற்றியமைக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தி இம்முறை ஆட்சிப் பீடத்தில் ஏறியுள்ளது.

இலங்கையில் 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக நாட்டின் 8-வது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியானது, பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து 2022-ஆம் ஆண்டில் மக்கள் போராட்டத்திற்கு மத்தியில் வீழ்த்தப்பட்டது.

ஊழல், மோசடி, வீண்விரயத்தைத் தவிர்க்கும் வகையிலான ஆட்சியொன்று அவசியம் என மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றைத் தவிர்க்கும் வகையிலான பரப்புரைகளைத் தொடர்ச்சியாக தேசிய மக்கள் சக்தி முன்வைத்து வந்தது. இதனூடாக, நடைபெற்று முடிவடைந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய அநுர குமார திசநாயக்கவை மக்கள் தேர்வு செய்திருக்கின்றனர்.

இந்நிலையில், ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்ட அநுர குமார திசநாயக்கவின் முதற்கட்டச் செயல்பாடுகள் குறித்து மக்கள் போராட்டம் நடத்திய மக்கள் என்ன சொல்கின்றனர்?

இதனை அறிந்துகொள்ள, மக்களின் எதிர்பார்ப்பு, இந்த ஆட்சி மாற்றத்தின் ஊடாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா, அவர்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்று காலி முகத்திடல் போராட்டத்தை நடத்திய போராட்டக்காரர்களிடம் பிபிசி தமிழ் வினவியது.

மக்கள் போராட்ட முன்னணியின் தேசியச் செயற்குழு உறுப்பினரான ராஜ்குமார் ரஜீவ்காந்த் பிபிசி தமிழிடம் கூறுகையில், "அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மீது எங்களுக்கு விமர்சனங்கள் இருந்தன. இந்த நாட்டிலுள்ள இனப் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வுதான் எங்களின் எதிர்பார்ப்பு.

"இதற்காகத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தாண்டி சிந்திக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கின்றது," என்றார்.

அதேபோல, தென்னிலங்கை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை, குறிப்பாக ஊழல் தடுப்பு தொடர்பான தங்களது கோரிக்கைகளை புதிய ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் என ராஜ்குமார் கூறுகிறார்.

"அடிமட்ட மக்களின் பிரச்னைகள் முன்நோக்கிக் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும்," என்றும் அவர் கூறுகின்றார்.

மேலும் பேசிய அவர், "சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ.எம்.எஃப்) இருந்து 16 தடவை நாங்கள் சென்று திரும்பியிருக்கின்றோம். ஐ.எம்.எஃப்-இடம் இருந்து விலக வேண்டும். இறைமை, பிணை முறியாளர்களின் நலனைக் காப்பதற்காகவே ஐ.எம்.எஃப் நடவடிக்கைகளுக்கு முன்பிருந்த அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. அவர்களுக்கு திருப்பிச் செலுத்தும் கடனில் மக்களின் வரிப்பணம் இருக்கின்றது. மக்களுக்கு இந்த சுமையைச் சுமத்த வேண்டாம் எனக் கூறுகின்றோம்," என்றார்.

மலையகத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் என்ற நான்கு தேசிய இனங்களும் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்துகிறார்.

"அதேபோன்று, மதச்சார்பின்மையைக் கடைபிடிக்க வேண்டும். மதமற்ற நாடு அல்ல. மதச்சார்பின்மையைக் கடைபிடிக்க வேண்டும். அரசியலமைப்பில் இருக்கின்ற 9-வது சரத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம்" எனவும் ராஜ்குமார் ரஜீவ்காந்த் வலியுறுத்தினார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியானது, நல்லாட்சியா இல்லையா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்ட டானிஸ் அலி தெரிவிக்கின்றார்.

"இலங்கை அரசியலில் இதுவரை ஒரு தரப்புதான் ஆட்சி செய்தது. ஒரு குடும்பம்தான் ஆட்சி செய்தது. கொள்கை ரீதியில் நாங்கள் இடதுசாரி கொள்கையில் இல்லை. எனினும், இந்த நேரத்தில் மாற்றமொன்று தேவைப்பட்டது.

"அந்த மாற்றம் கிடைத்துள்ளது. நாம் போராட்டம் செய்ததைப் போன்றே, தேசிய மக்கள் சக்தி மக்களோடு மக்களாக இருந்தே தேர்தல் பிரசாரத்தைச் செய்தது. இந்தப் பிரசாரத்திலேயே மக்கள் ஆட்சியை விரும்பிய மக்கள் வாக்களித்துள்ளனர். இது நல்லாட்சியா இல்லையா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்," என அவர் கூறுகின்றார்.

காலி முகத்திடல் போராட்டத்தின் ஊடாகக் கோரிய விஷயங்கள், தற்போது ஆட்சிப் பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தி மூலம் நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றதா என காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பிபிசி தமிழ் வினவியது.

இந்தக் கேள்விக்கு காலி முகத்திடல் போராட்டத்தின் பின்னர் அந்தப் போராட்டக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சட்டத்தரணி சுஷ்திகா அருணலிங்கம் பிபிசி தமிழுக்கு பதிலளித்தார்.

"முறைமை மாற்றம், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என நாங்கள் கேட்டோம். முறைமை மாற்றம் என்பது ஒரு நீண்ட கால விஷயம். இது ஒரு மாதத்தில் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை," என்றார்.

குறிப்பாக, இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற தங்கள் வாக்குறுதியை அடுத்து வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் ஊடாக செய்யக்கூடிய ஒரு விஷயம் எனக் குறிப்பிட்ட அவர், அதனை புதிய ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் எனக் கூறினார்.

"பொருளாதார, அரசியல், கலாசார ரீதியான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அது இந்த ஒரு தேர்தலில் வந்துவிடும் என நாங்கள் நம்பவில்லை," என அவர் குறிப்பிடுகின்றார்.

தமிழர் பிரச்னைக்கு இந்த ஆட்சியின் ஊடாகத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதா என மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்று குழு உறுப்பினர் சட்டத்தரணி சுஷ்திகா அருணலிங்கம் பிபிசி தமிழ் வினவியது.

"சிறுபான்மை மக்களின் உரிமை மற்றும் தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு போன்ற விஷயங்கள் இருக்கின்றனவா என்று தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தைப் பார்த்தோம். அந்தக் கொள்கைப் பிரகடனத்தில் அதற்கான தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை. 13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவோம் என்றுகூட அதில் போடப்படவில்லை.

"அதனால், இவர்களின் ஆட்சியில் சிறுபான்மை மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், அரசியல் அபிலாஷைகளுக்கும் ஒரு தீர்வு வரும் என்றுகூட நான் நம்பவில்லை," என்றார் அவர்.

இருந்தபோதிலும், முன்னைய காலங்களில் இருந்த அரசாங்கங்களைப் போன்று இனவாத ரீதியாகச் செயற்பட மாட்டார்கள் என்று நம்புவதாகவும் அவர் கூறினார்.

"கடந்த ஆட்சியாளர்களால் செய்யப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றம், பௌத்தமயமாக்கல் போன்றவற்றை இவர்கள் செய்ய மாட்டார்களா அல்லது தொடர்ச்சியாக இதனைச் செய்வார்களா என்பதைப் பார்த்தே ஒரு முடிவுக்கு வர வேண்டும்," என சுஷ்திகா அருணலிங்கம் தெரிவித்தார்.

காலி முகத்திடல் போராட்டத்தின் போது, போராட்டக்காரர்களால் எதிர்பார்த்த முறைமை மாற்றம் இந்த ஆட்சியில் கிடைத்துள்ளது என நம்புகின்றீர்களா என போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரரான தாஹா ஈன்ஸ்டீனிடம் பிபிசி தமிழ் வினவியது.

"மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் எதிரொலி மற்றும் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அவருடைய காய் நகர்வு இருக்கின்றது.

"அவர்கள் நியமிக்கின்ற அமைச்சுக்கள் மற்றும் அரச இயந்திரங்களில் பொறுப்பாளர்களைப் பார்க்கின்றபோது நம்பிக்கை வருகின்றது. இது சரியான பாதையில் செல்லும் அரசாங்கம் என்று நம்புகின்றோம்," என தாஹா ஈன்ஸ்டீன் தெரிவிக்கின்றார்.

இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியை அடுத்து 2022-ஆம் ஆண்டு நாட்டில் பாரிய போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தப் போராட்டங்களை அடுத்து, அப்போதைய ஜனாதிபதியாக பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஸ, நாட்டை விட்டு தப்பிச் சென்ற நிலையில், ரணில் விக்ரமசிங்க புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட நிலையில், நாடு எதிர்நோக்கிய பாரிய பொருளாதார நெருக்கடி வழமைக்குத் திரும்ப ஆரம்பித்தது.

எனினும், இலங்கை அரசியல் கட்டமைப்பில் முறைமை மாற்றமொன்று அவசியம் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக வலுப்பெற்று வந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கை இலங்கை மக்கள் மீது வலுப் பெற்றது.

ஊழல், மோசடி, வீண்விரயத்திற்கு எதிராகத் தொடர்ந்து குரல் எழுப்பி வந்த தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கை காரணமாக, இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக அநுர குமார திஸநாயக்க தேர்வு செய்யப்பட்டார்.

காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டோரின் குழுவொன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் களமிறங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

BBC

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நல்லூரில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு







ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம், இன்றையதினம் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, இரண்டு மாவீரர்களின் சகோதரியும், முன்னாள் போராளியுமான பெண்ணொருவர் பொதுச்சுடர் ஏற்றினார்.

அதனை தொடர்ந்து தியாக தீபத்தின் உருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் இரண்டு தூக்கு காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன் , யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஊர்தி பவனிகள் வந்திருந்தன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்



**தனிப்பட்ட...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சதி எவ்வாறு நடந்துள்ளது என்பது தொடர்பில் தகவல் வந்துள்ளது. எனினும் அந்த விடயங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவது குறித்து தொடர்ந்து விசாரணைகளை நடத்த வேண்டியுள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய எழுதிய "உயிர்த ஞாயிறு தாக்குதலும் தீர்க்கப்படாத மர்மங்களும்" என்ற புலனாய்வு நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

சட்ட வல்லுனர்கள், சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, "ஹர்ஷித் மௌலானா என்பவர் தொடர்பில் தகவல் வெளியானது. அவரது கருத்துக்கள் தொடர்பில் ஆழமாக விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பில் இன்னும் விசாரணையில் ஆரம்பிக்கப்படவில்லை என நான் நினைக்கின்றேன். அதில் உள்ள முக்கிய விடயம் தொடர்பாக நான் கூறுகின்றேன். அதனுடன் தொடர்பற்ற ஒருவர் தொடர்பில் அவர் கூறுகின்றார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் எமது ஒருவர் இருக்கின்றார். அவரை வெளியில் எடுக்குமாறு கூறியுள்ளார். நான் மட்டக்களப்பில் இருக்கின்றேன். என்னால் அதனை செய்ய முடியாது என அவருக்கு கூறியுள்ளனர். தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெடிக்கச் சென்ற ஜமீல் என்பவர் தொலைபேசியில் உரையாடுவதை காண முடிகிறது.

அதனை சி.சி.டி.வியில் காண முடிகிறது. அந்த அழைப்பு வந்து சில செகன்களில் பையை எடுத்துக் கொண்டு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இருந்து வெளியேறினார். அதன் பின்னரே தெஹிவளையில் உள்ள விடுதிக்கு அவர் செல்கின்றார். அங்கு ஒரு அறை வாடகைக்கு எடுத்து அங்கு தனது பையை விட்டுவிட்டு அருகிலுள்ள பள்ளிவாசலுக்குச் சென்றார்.

இதன் போது ஏற்படுகின்ற சந்தேகத்தின் பின்னரே பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு சென்ற போதே இவர் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அதன் பின்னர் குறித்த அந்த நபருடன் விசாரணை மேற்கொண்டபோதுதான் மனைவியுடன், ஏற்பட்ட சர்ச்சை காரணமாக வந்ததாக ஜமீல் கூறினார். வேண்டுமென்றால் மனைவியின் தொலைபேசி இலக்கத்தை தருகிறேன் அவரிடம் கேளுங்கள் எனக் கூறியுள்ளார். அவரின் மனைவியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வாய்த் தர்க்கம் ஏற்பட்டு வெளியேறினார் எங்கு சென்றார் என தெரியவில்லை என்று பதிலளித்தார்.

புலனாய்வுப்பிரிவினரும் அவர் வீட்டிலிருப்பதாக எண்ணி தேடுகின்றார்கள். ஒமார் கர்த்தா என்பது அவரது மனைவியின் பெயர். ஒமார் கர்த்தாவின் தொலைபேசிக்கு பாதுகாப்பு அதிகாரிகள் அழைப்பெடுத்தனர். விபரங்களைக் கேட்டறிந்தனர்.

பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் அங்கிருந்து வெளியேறினார். அதன் பின்னர் சுமார் பத்து நிமிடங்களின் பின்னர் ஜமீலின் மனைவி தொலைபேசியில் தொடர்பு கொள்கின்றார். அவரை அங்கே வைத்துக்கொள்ளுங்கள் நான் வருகிறேன் என கூறியுள்ளார்.

வவுனதீவில் பொலிஸ் உத்தியோகத்தவர்கள் இருவர் படுகலை செய்யப்பட்ட இடத்திற்கு விசாரணைகளை நடத்துவதற்கு நான் ஒரு குழுவினரை அனுப்பினேன். நீண்ட விசாரணைகள் இடம்பெற்றது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி அரச புலனாய்வுப்பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தினார். இந்த கொலைக்காக பயன் படுத்தப்பட்ட ஜெக்கட் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அது தொடர்பில் வாசாரணை நடத்த வேண்டும் என கூறினார். குற்றச்செயல் இடம்பெற்ற இடத்தை தவிர்த்து வேறு ஒரு இடத்தில் அதனை செய்துள்ளார்.

வவுனதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்த அஜந்தன் என்பவரின் வீட்டுக்கே மோப்ப நாய் சென்றது. இந்த சம்பவம் இடம்பெற்ற நாள் நவம்பர் மாதம் 30ஆம் திகதி. டிசம்பர் மாதம் 3ஆம் திகதியாகும் போது 72 மணித்தியாலங்கள் கடந்துள்ளன. ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கபூர் மாமா கைது செய்யப்பட்டதையடுத்து சஹ்ரான் தலைமையிலான தௌகீத்ஜமாத் அமைப்பே இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற விடயம் தெரிய வந்தது. ஏன் புலனாய்வுப் பிரினிர் இவ்வாறான தகவல்களை வழங்கி ஏன் விசாணைகளை திசை திருப்பினர் என்பது பாரிய பிரச்சினையாகும்.

இது தொடரபில் தேடும் போதே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய 2019 நவம்பர் மாதமட 19ஆம் திகதி தான் ஜனாதிபதியாக சத்தியபிரமாணம் செய்தார். அப்போது நான். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் இருந்தேன். எவ்வித காரணம் இல்லாமல் நான் இடமாற்றம் செய்யப்பட்டேன்" என்று முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரமேலும் தெரிவித்தார்.








## ஒரு மில்லியனையும் கடந்த ஜனாதிபதி

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் Facebook பயனாளர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனை கடந்துள்ளது.




## பிக்மீ ஓட்டோ சாரதி மீது யாழ். நகரில் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் பிக்மீ ஓட்டோ சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக நபர் ஒருவர், பிக்மீ அப்ஸ் மூலம் ஓட்டோ சேவையை நாடியபோது, அவ்விடத்துக்குச் சென்ற என்னை ஓட்டோ தரிப்பிடத்தில் தரித்து நின்ற ஓட்டோ சாரதி ஒருவர், சேவையை நாடிய நபரை என்னை ஏற்ற விடாது தடுத்து என் மீது தாக்குதல் நடத்தினார்.

என் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன். முறைப்பாட்டின் பிரகாரம் தாக்குதலாளியைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, அவர் முன்னாடி விசாரணைகளை மேற்கொண்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் என்னை ஏசி, தாக்குதலாளிக்குச் சார்பாக நடந்து கொண்டார்.

தாக்குதலாளியும், மேற்படி பெண் பொலிஸ் உத்தியோகத்தர் முன்பாக என்னை வெட்டுவேன் என மிரட்டினார்.

அதனால் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி விட்டேன். இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளேன்." - என்றார்.

# மட்டக்களப்பு மாவட்ட வினாடி வினா போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி முதலிடம்










(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்குப் பல்கலைக கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தினால் மூன்றாவது தடவையாக நடாத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின்5 கல்விவலயங்களை சேர்ந்த உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட 24பாடசாலைகளுக்கிடையில் இந்த வினாடி வினாப்போட்டி இடம்பெற்றது. மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் உயர்தர வர்த்தகப் பிரி வைச்சேர்ந்த (2024) மாணவர்களான கே.துவிச்சன் , ,ஆர். மிதுசான், ரீ.அபிச்சரிசன் ,ஆர்.தாட்சயன் ஆகிய மாணவர்கள்பங்கு கொண்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பரிசளிப்பு நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து கொண்டார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





# மட்டு. புனித மிக்கேல் கல்லூரி டென்னிஸ் போட்டியில் சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் டென்னிஸ் சங்கம் நடாத்திய 13 வயதுக்கு உட்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய டென்னிஸ் சுற்றுப்போடியில் ஆண்களுக்கான பிரிவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றி வாகை சூடி சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

புனித மிக்கேல் அணியினர் இலங்கையின் பிரபல பாடசாலைகளான கொழும்பு ரோயல் கல்லூரி , கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, காலி ரிச்மென்ட் கல்லூரி என்பவற்றை முதல் சுற்றில் வென்று, அரை இறுதியில் கொழும்பு தேஸ்டன் கல்லூரியை வென்று, இறுதி போட்டியில் குருநாகல் மலிய தேவ கல்லூரியை வென்று சம்பியன் பட்டத்தை தனதாக்கி கொண்டது

# இரவில் யானைகள், பகலில் குரங்குகள் மக்களின் அன்றாட வாழ்வு சர்குலைவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் இரவில் காட்டு யானைகளும், பகலில் குரங்குகளின் தொல்லையும் அதிகரித்துள்ளதால் பிரதேசவாசிகளின் அன்றாட வாழ்க்கை சீரழிந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மகாஓயா, பதியத்தலாவ, தெஹியத்தக்கண்டிய மற்றும் நாமல்ஓயா பிரதேசங்களில் இரவில் காட்டு யானைகளின் தொல்லை முன்னரை விட அதிகரித்துக் காணப்படுவதால் உயிர்கள் காவு கொள்ளப்படுவதுடன், குடியிருப்புகளுக்கும், உடமைகளுக்கும், பயிர்களுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன.

பகலில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் வீடுகளில் காணப்படும் உணவுப்பொருட்கள் மற்றும் பாடசாலைக்கு பிள்ளைகள் கொண்டு செல்லும் உணவுப் பொருட்களையும் குரங்குகள் பலவந்தமாக பறித்துச் செல்வதால் மாணவர்கள் பாடசாலைக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்வதில் பலவிதமான சிக்கல்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

பயிர் செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராகவுள்ள அனேகமான பழமரங்களையும் பழங்களையும் குரங்குகள் உண்டு சேதப்படுத்துவதால் பொருளாதார ரீதியில் பலவழிகளிலும் நஷ்டமடைந்து வருவதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2024இல் வெளியிடப்பெற்றது.